<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 48/2023</u>**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 25.11.2025

Dw1 (வெள்ளியங்கிரி)

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்கத் தெரியும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த செக்கியூரிட்டி பத்திரத்தில் உள்ள சாட்சிகள் எனது மருமகன்கள். நான் எனது இரு மகள்களுக்கும் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். எனது இரு மகள்களும் படித்துளளனர், எந்த வருடம் படிப்பை முடித்தனர் என்று ஞாபகமில்லை. எனது இரு மகள்களும் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளனர். எனது இரு மகள்களும் கல்லுரிக்கு செல்லவில்லை. எனது இரண்டு மகள்களில் ஒரு மகள் வழக்கறிஞராக பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது மற்றொரு மகள் என்ன பட்டப்படிப்பு படித்தார் என்று தெரியாது. எந்த வருடம் படித்து முடித்தனர் என்று ஞாபகமில்லை. எனது மூத்த மகளுக்கு எந்த ஆண்டு திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் 2018 ம் ஆண்டு. மற்றொரு மகளுக்கு 2020 ல் திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகள்களின் படிப்பு செலவு மற்றும் திருமண செலவை கடன் பெற்று தான் செய்தேன் என்றால் சரிதான். தற்போதும் கடன் செலுத்தாமல் தான் உள்ளேன். எனக்கு இன்னும் 2 லட்சம் கடன் உள்ளது. வாதி மகேந்திரனுக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. வாதி தனது மகளை எனது ஊரில் தான் திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கமாக பால் சொசைட்டி மற்றும் கூட்டுறவு சொசைட்டி வட்டியில்லா கடன் பெற்றுள்ளதார் அங்கு கையொப்பம் பெற்றுள்ளேன். நான் கூட்டுறவு சொசைட்டியில் சுமார் 6-7 ஆண்டுகளாக கடன் பெற்று வருகிறேன். நான் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பும்போது மேற்படி பால் சொசைட்டி மற்றும் கூட்டுறவு சொசைட்டியில் உள்ள எனது கையொப்பங்களை பெற்று

முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரிதான். எனக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவீப்பில் வாதியின் விலாசம் மற்றும் வாதியின் வழக்கறிஞர் விலாசம் அனுப்பப்பட்டது என்றால் சரி. நான் வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கோ அல்லது வாதியின் இருப்பிடத்திற்கோ சென்று கடனுறுதி சீட்டின் நகல் கொடுக்குமாறு கோரவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்று நான் பதிலிறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். சின்னசாமி என்பவரிடம் நான் எவ்வளவு தொகை பெற்று கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா கடனுறுதி சீட்டில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா கடனுறுதி சீட்டு மோசடியானது என்பதை குறித்து நான் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக தான் என் மகள்கள் பெயரில் நான் தான செட்டில்மெணட் ஆவணங்களை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதனால் தான் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் வேவ்வேறு கையொப்பங்கள் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ளகையொப்பத்தை மறுப்பதற்காக தான் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு படிப்பறிவு இல்லை என்பதால் என் கையொப்பங்களை மாற்றி மாற்றி போட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கொடுக்க வேண்டிய கடனை ஏமாற்றுவதற்காக பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் 05.01.2020 ல் பெற்ற கடனை தீர்க்க சட்டப்படி கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக வழக்கறிஞர் அறிவிப்பை பெற்ற பின் சொத்துக்களை பொறுத்து ஆவணங்களை ஏற்படுத்த முயற்சித்ததால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானும் வாதியும் வழக்கு கடன் சம்பந்தமாக 2 முறை சமரசம் பேசினேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் ஆஜரான உடனேயே நடவடிக்கை எடுக்காமல் வாதியின் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்த பின் தான் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரிதான். கையெழுத்து நிபுணரிடமிருந்து பெற்ற அறிக்கை தவறாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சின்னசாமி என்ற நபருக்கும் வாதிக்கும்

எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு செலுத்த வேண்டிய கடனை ஏமாற்ற மேறப்டி கடனிற்கு தொடர்பில்லாத சின்னசாமி என்பவரின் பெயரை குறிப்பிட்டு வாதியின் கடனை மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நடவடிக்கைகளை என் மகளே பார்த்துக கொண்டார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு என் மகள் தான் பதில் அறிவிப்பு விவரங்கள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்கள் என் மகள் எனது அறிவுறுத்தல் பேரில் தயார் செய்தார் என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையொப்பம் ஒவ்வொரு பக்கத்தி லும் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூட்டுறவு சங்கத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணத்தில் உள்ள கையொப்பமும், செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையொப்பமும் வேறுபடுகிறது என்றால் சரியல்ல. கூட்டுறவு சங்கதில் உள்ள எனது கையொப்பமும் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டு ஆவணத்தில் நான் கையொப்பம் செய்ததற்கும் 2020 ம் ஆண்டு நான் கையொப்பம் செய்ததற்கும் உள்ள எழுத்து வடிவம் (size) வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். கையெழுத்து நிபுணர் அறிக்கையில் மேற்படி கடனுறுதி சீட்டு மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ள கையொப்பம் வெவ்வேறு நபர்களால் செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்து கொடுத்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தாவா கடனுறுதி சீட்டில் உள்ளதொகையை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.11.25 18:42:33 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS